குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.528/2025

அ.சா.1

2026–ம் ஆண்டு ஜுலை 07–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 1 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.13 மணி,

Accused A1)Andi, A2)Kumar, A3)Poongodi are present. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தொளசம்பட்டி பேக்காட்டில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். 1 ஆம் எதிரி எனது உடன்பிறந்த சகோதரர், 2 மற்றும் 3 எதிரிகள் அவரது மகன் மற்றும் மகள் ஆவர். எங்களுக்கிடையே தடவழிப்பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 28.06.2022 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் என் வீட்டருகே இருந்தபோது ஆண்டி அங்கு வந்து தடவழிப்பிரச்சினை சம்மந்தமாக சத்தம்போட்டு பேசிக்கொண்டிருந்தார். எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

2. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து எனக்கு வலதுகண் புருவம் அருகே காயம் ஏற்பட்டது. நான் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

3. நான் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரி தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் கையெழுத்து செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 28.06.2022 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் என் வீட்டருகே 1 ஆம் எதிரி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, என்னை எட்டி உதைத்து கீழே தள்ளி, தறி நாடாவை எடுத்து என் வலது கண் புருவம், நடு நெஞ்சி பகுதி, முதுகு ஆகிய இடங்களில் மாறிமாறி குத்தினார் என்றும், 2 , 3 எதிரிகள் இருவரும் என்னை காலால் எட்டி உதைத்தும், கையாலும் அடித்தார்கள் என்று கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.18 மணி.**